பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**12 07 2026 SUNDAY 6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) நியூசிலாந்தில் தாம் மேற்கொண்ட அரசுமுறைப்பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் மரம் நடும் இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

3) ஊழல் அற்ற நிர்வாகத்தை வழங்க வேண்டும் என்பதில் தவெக அரசு உறுதியுடன் உள்ளதாக நிதியமைச்சர் திரு மரியவில்சன் கூறியுள்ளார்.

4) போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த தவெக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

5) 23 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

நியூசிலாந்தில் தாம் மேற்கொண்ட அரசுமுறைப்பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவில் இதுவரை இல்லாத அளவிலான நல் விளைவுகளை இந்தப்பயணம் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் மரம் நடும் இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கவும் இது உதவிடும் என்று குறிப்பிட்டார்.

பருவநிலை பாதிப்புகளை களைவதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கம் அளித்தல் போன்றவை இதில் அடங்கும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<>>>>>>

ஊழல் அற்ற நிர்வாகத்தை வழங்க வேண்டும் என்பதில் தவெக அரசு உறுதியுடன் உள்ளதாக நிதியமைச்சர் திரு மரியவில்சன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மாணவர்கள் ஆக்கப்பூர்வமாக பங்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மகளிர் பாதுகாப்பிற்கு முதலமைச்சர் திரு விஜய் உயர் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் திரு மரியவில்சன் கூறினார்.

<<<<<<>>>>>>

மக்கள் நலனை மட்டுமே கருத்தில்கொண்டு தவெக அரசு செயல்பட்டு வருவதாக சிறு-குறு தொழில்துறை அமைச்சர் திரு மதன்ராஜா கூறியுள்ளார்.

இன்று தூத்துக்குடியில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசினார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

திமுக-வுடன், விடுதலை சிறுத்தைகள் கட்சி நட்புடன் உள்ளதாக மாநில அமைச்சர் திரு வன்னியரசு கூறியுள்ளார்.

இன்று கோவில்பட்டியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக-வுடன் நட்பு என்பது வேறு, அரசியல் நிலைப்பாடு என்பது வேறு என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு தொல் திருமாவளவன் தெளிவுபடுத்தியதையும் சுட்டிக்காட்டினார்.

தவெக-வும், திமுக-வும் ஓரணியில் இடம்பெற வேண்டும் என்றும் திரு வன்னியரசு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த தவெக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தவெக-வினர் போதைப்பொருளை பயன்படுத்துவதாக குற்றம் சாட்டியுள்ளது.

இதனை களைவதற்கு தேவையான நடவடிக்கைகளை முதலமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்றும் அஇஅதிமுக அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் உள்ள பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சம் குறைந்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசு பள்ளிகளில் போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாததும், ஆசிரியர்கள் குறைவாக இருப்பதும்தான் இதற்கு காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனை களைய தவெக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

மறைந்த பழம்பெரும் திரைப்பட பின்னணி பாடகி ஜானகியின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் கர்நாடக மாநிலம் மைசூருவில் இன்று நடைபெற்றது.

ஏராளமானோர் இதில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

ஆகாஷ்வாணி கோடைப் பண்பலையின் 27-ஆம் ஆண்டு உதயவிழா நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் இன்று நடைபெற்றது.

இதில் நேயர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — கண்ணன் - 49 Sec. )*

<<<<<<>>>>>>

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி பூண்டு அறுவடைப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த வகை பூண்டிற்கு தற்போது நல்ல விலை கிடைப்பதாக விவசாயி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte — சரவணன் - 23 Sec. )*

<<<<<<>>>>>>

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த ஆறு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை அடுத்த நான்கு நாட்களில் 2 முதல் 4 டிகிரி செல்சியஸ்வரை அதிகரிக்கக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூரில் போதைப்பொருளின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மினி மாரத்தான் ஓட்டம் இன்று நடைபெற்றது.

----------------

செங்கல்பட்டு மாவட்டத்தில் 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை காவல்துறையினர் தீயிட்டு அழித்தனர்.

----------------

நெல்லை மாவட்டம் மாஞ்சோலை எஸ்டேட் நிலங்கள் அனைத்தும் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தனியார் நிறுவனத்திடமிருந்து, வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டன.

----------------

நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் பண்ணை கொள்முதல் விலை **6** ரூபாய் **65** காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

-------------

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை விடுமுறை தினமான இன்று வெகுவாக அதிகரித்தது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

சீனாவின் **Ordos**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் **Anand Singh** தங்கப்பதக்கத்தையும், **Lohakare** வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் **400** மீட்டர் தொடர் ஓட்டத்தில் தங்கப்பதக்கத்தையும், **100** மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தையும் இந்தியா வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **3** தங்கம், **3** வெள்ளி, **9** வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

--------------

சர்வதேச இணைய மகளிர் **Speed Chess** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், அமெரிக்காவின் **Rose Atwell**-ஐ வென்றார்.

--------------

உலகக் கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் **Neeru** தங்கப்பதக்கம் வென்றார்.

இத்தாலியின் **Lonato**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

டோமினிக்காவில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Shaurya Bhardwaj** பட்டம் வென்றார்.

--------------

இந்தியா — இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஜூனியர் மகளிர் ஹாக்கிப்போட்டி இன்று நடைபெறுகிறது.

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி **11.30**-க்கு தொடங்குகிறது.

--------------

இங்கிலாந்துக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

**Lords**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஒரு விக்கெட் இழப்பிற்கு **154** ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிவரும் இந்தியா சற்றுமுன்வரை **5** விக்கெட் இழப்பிற்கு **264** ரன் எடுத்துள்ளது.

**Yastika Bhatiya** சதம் அடித்து சாதனை படைத்தார்.
இந்தியா முதல் இன்னிங்சில் **285** ரன்னுக்கும், இங்கிலாந்து முதல் இன்னிங்சில் **170** ரன்னுக்கும் ஆட்டமிழந்தன.

-----------

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணியில் காயம் காரணமாக ஹர்ஷித் ராணாவுக்கு பதிலாக பிரின்ஸ் யாதவ் சேர்க்கப்பட்டுள்ளார்.

**<<<<<<END>>>>>>**